# வரையறுக்கப்பட்ட தேசிய கடன் உத்தரவாத நிறுவனம்

NCGI National Credit Guarantee Institution

# வேலை வாய்ப்புகள்

வரையறுக்கப்பட்ட தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (NCGIL) என்பது இலங்கை அரசாங்கத்திற்கும் 13 முன்னணி பங்குதாரர் நிதி நிறுவனங்களுக்கும் (SFIs) இடையில், நாட்டின் நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (MSME) துறையை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதொரு பொது-தனியார் கூட்டு நிறுவனமாகும். நிதி நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாதங்களை வழங்குவதன் மூலமும், சிறு தொழில்களுக்கு காசுப்பாய்ச்சல் அடிப்படையிலான கடன் வழங்கலை ஊக்குவிப்பதன் மூலமும் பொருளாதார வளர்ச்சியை மேலோங்கச் செய்வதே இதன் நோக்கமாகும்.

நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (MSME) சூழல் குறித்த சிறந்த அறிவு, சிறந்த தகவல் தொடர்புத் திறன் மற்றும் அர்ப்பணிப்புடன் கூடிய ஒரு குழுவாகச் செயல்படக்கூடிய நபர்களை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

***நீங்கள் MSME துறையின் வளர்ச்சியை துரிதப்படுத்த விரும்பும் நபரொருவராக இருப்பின், எங்களுடன் இணையுங்கள்!***

***முக்கிய தகைமைகள், அனுபவம் மற்றும் பொறுப்புகள்:***

| | |
|---|---|
| ***இடர் மேலாண்மைத் தலைவர்/ தலைமை இடர் அதிகாரி***<br><br>முன்னோக்கிய தலைமைப் பதவியான இப்பணி, இடர் மேலாண்மை கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் இலக்குகளை திட்டமிடுதல், உருவாக்குதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றுக்கு பொறுப்பாகும். இப்பணி NCGI நிறுவனத்தின் உத்தரவாத முதலீட்டுத் தொகுப்புச் செயல்பாடுகளின் மதிப்பாய்வை மேற்பார்வை செய்து, முதலீட்டு தொகுப்பின் இடர் மற்றும் லாபநிலை சிறப்பாக்கத்தை உறுதி செய்யும். மேலும், நிறுவனத்தின் மொத்த செயல்பாடுகளில் இடரை திறம்பட நிர்வகிப்பதற்கும் பொறுப்பாக இருக்கும்.<br><br>* செயல்திறனின் அடிப்படையில் புதுப்பிக்கப்படும் 3 ஆண்டு ஒப்பந்த அடிப்படையிலான பதவி. | • நிதி, கணக்கியல், பொருளாதாரம், வணிக நிர்வாகம், அறிவியல் அல்லது அது தொடர்பான துறையில் இளமானிப் பட்டம் கொண்டிருத்தல்.<br>• அல்லது CA, CIMA, ACCA, CMA, DBF அல்லது அதற்கு இணையான தொழில்முறைத் தகுதி கொண்டிருத்தல்.<br>• நிதி, கணக்கியல், பொருளாதாரம், வணிக நிர்வாகம், அறிவியல் அல்லது அது தொடர்பான துறையில் முதுகலைப் பட்டம் பெற்றிருப்பது கூடுதல் தகுதியாகும்.<br>• வங்கி அல்லது நிதித் துறையில் குறைந்தபட்சம் 10 வருட அனுபவம், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான கடன் வழங்குதலில் பரிச்சயம் மற்றும் கடன் இடர் மேலாண்மையில் நேரடி அனுபவம், அத்துடன் பாரம்பரிய கடன் இடர் மேலாண்மைக் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள் குறித்த அறிவு மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் திறன் ஆகியவை அடங்கியிருக்க வேண்டும்.<br>• 40 – 57 வயதுக்குற்பட்டவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் |

* ***கொழும்பில் பணிபுரிய விருப்பமுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து மாத்திரமே*** *விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன*

**கொடுப்பனவு :** தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு கவர்ச்சிகரமான கொடுப்பனவு வழங்கப்படும்.

***தேர்வுச் செயன்முறை*** : ஒரு விரிவான நேர்முகத் தேர்வுச் செயன்முறை மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்வுச் சயன்முறையின் அனைத்து நிலைகளிலும், தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்படும் என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

நீங்கள் ஆர்வமாகவும், தகுதியுடையவராகவும் இருப்பின், தொடர்பு கொள்ளக்கூடிய இரு **உறவினரல்லாத சான்றுரையாளர்களின்** மின்னஞ்சல் முகவரிகளை உள்ளடக்கி தங்களின் முழுமையான சுயவிபரக்கோவையை **PDF** வடிவில் இந்த விளம்பரம் வெளியான **7 நாட்களுக்குள் careers@ncgil.lk** மின்னஞ்சலூடாக சமர்ப்பிக்கவும்.

மின்னஞ்சலின் தலைப்பு வரியில் அல்லது உறையின் மேல் இடது மூலையில் **"NCGI – [விண்ணப்பிக்கும் பதவி]"** எனக் குறிப்பிடவும்.

**வரையறுக்கப்பட்ட தேசிய கடன் உத்தரவாத நிறுவனம்**
**செயலகம், 321, 3வது மாடி, லோட்டஸ் வீதி, கொழும்பு 01.**

***www.ncgil.lk***